# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 6-ஆம் தேதி புதுச்சேரியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்றாம் கட்டமாக புதுச்சேரியில் பரப்புரையை தொடங்குகிறார்.

## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **06.04.2026 (திங்கட்கிழமை)** | | |
| மாலை 5 மணி | புதுச்சேரி | புதுச்சேரி மாநிலம் |
| **07.04.2026 (செவ்வாய்க் கிழமை)** | | |
| காலை 9 மணி | கடலூர் (பொதுக்கூட்டம்) | திட்டக்குடி, விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர், நெய்வேலி, புவனகிரி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் |
| மாலை 5 மணி | நாகப்பட்டினம் (பொதுக்கூட்டம்) | நாகப்பட்டினம், கீழ்வேளூர், வேதாரண்யம் |
| **08.04.2026 (புதன் கிழமை)** | | |
| காலை 9 மணி | சீர்காழி (பொதுக்கூட்டம்) | மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் |
| மாலை 5 மணி | விழுப்புரம் (பொதுக்கூட்டம்) | திண்டிவனம், வானூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், செஞ்சி, மயிலம் |
| **09.04.2026 (வியாழக் கிழமை)** | | |
| காலை 9 மணி | திருவண்ணாமலை (பொதுக்கூட்டம்) | உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி |
| மாலை 5 மணி | மறைமலைநகர் (பொதுக்கூட்டம்) | செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம் |



குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18
நாள் : 04.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், வி.செந்தில் பாலாஜி பெரிய பள்ளிவாசல், எஸ்.எஸ். கோயில் வீதி, சாமியார் பொது வீதி, வின்செண்ட் ரோடு, புக்கடை, துர்கலால் வீதி, ஈஸ்வரன் கோவில் வீதி உள்ளிட்ட பகுதிகளில் வீதியாக சென்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இதில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகர் மாவட்ட கழக துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பெரிய கடைவீதி பகுதி பொறுப்பாளர் பதுருதீன், மாநகராட்சி நிதி குழு தலைவர் முபஷீரா உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர்கள் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் க. சுந்தர். தேர்தல் அதிகாரி விஜயகுமாரிடமும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி. நித்யா சுகுமார். தேர்தல் அதிகாரி. ஆஷிக் அலி அவர்களிடமும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். உடன் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி.மகாலட்சுமி யுவராஜ்..ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் வழக்கறிஞர் பா கார்த்திகேயன். பேரூர் செயலாளர். என்.பாண்டியன். வி.சி.க. மாவட்ட செயலாளர்கள் எழிலரசு விப்பேடு அருள் உடன் இருந்தனர்.